தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 108 | 4 Pages | 16.11.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 108 | 4 பக்கங்கள் | 16.11.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

# அரசு மருத்துவமனைகளில் வருகிறது புதிய கட்டுப்பாடு

## தமிழகம் முழுவதும் அமல்: மருத்துவர்கள் மீது தாக்குதல் எதிரொலி

சென்னை, நவ.16

சென்னைக்கு கிண்டி கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் மருத்துவர் பாலாஜி தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, அரசு மருத்துவமனையில் புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. நேற்று முன்தினம் சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனையில் பாலாஜி என்ற டாக்டர் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.



இந்நிலையில், மருத்துவர்கள் உடன் அமைச்சர் ஆர். சுப்பிரமணியன் பேச்சுவார்த்தை நடத்தி, மருத்துவர்கள் அனைத்து கோரிக்கைகளுக்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

இந்நிலையில் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் உள் நோயாளிகளை கவனித்துக் கொள்ள வருபவர்களுக்கு கையில் ஒரு அடையாள டேக் கட்டப்படும் எனவும், அவர் எந்த நோயாளியை பார்க்க வந்தவர் எந்த வார்டில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என்ற விவரம் அந்த டேக்கில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது. டேக் கையில் இருந்தால் மட்டுமே உள்ளே செல்ல அனுமதிக்கப் படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது. இந்த நடைமுறையை சென்னையில் மட்டும் அல்லாமல், தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மருத்துவமனை களிலும் உடனடியாக அமல்படுத்தப்படும் என்றும், இனிமேல் நோயாளிகளை பார்க்க யார் வேண்டுமானாலும் மருத்துவ வளாகத்திற்கு செல்வது சாத்தியமில்லை என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் இந்த நடைமுறை அமலில் இருந்து வரும் நிலையில், தற்போது இது தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் அமல்படுத் தப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை

விளக்கம்:
எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் மனதால் எண்ணி உண்டாகின்ற துன்பச்செயலைச் செய்யாதிருத்தலே நல்லது.

## குஜராத்தில் 700 கிலோ போதைப்பொருள் பறிமுதல்; 8 ஈரானியர்கள் கைது



காந்திநகர், நவ.16

குஜராத் மாநிலம் போர்பந்தர் அருகே உள்ள கடற்பகுதியில் போலீசார், கடற்படை மற்றும் போதைப்பொருள் தடுப்புப்பிரிவினரின் கூட்டு சோதனையில் ஈடுபட்டனர். அப்போது ஒரு படகில் இருந்து 700 கிலோ மெத்தபெட்டமைன் என்ற போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் போதைப்பொருளை கடத்த முயன்ற 8 ஈரானியர்களை போலீசார் கைது செய்துள்ளனர். கைதானவர்களிடம் அதிகளவிலான போதைப்பொருள் எங்கிருந்து எங்கு கொண்டு செல்லப்பட இருந்தது என்ற கோணத்தில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், போதைப்பொருள் இல்லாத பாரதத்திற்கான பிரதமர் மோடியின் தொலைநோக்கு பார்வையை இன்று நமது அதிகாரிகள் போதைப்பொருள் கடத்தல் கும்பலை பிடித்து தோராயமாக கைப்பற்றியது. குஜராத்தில் 700 கிலோ கடத்தல் போதைப்பொருளை குஜராத் கடற்படை, போலீசார் மற்றும் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகளின் கூட்டு நடவடிக்கையில் முறியடிக்கப்பட்டது. இந்த சம்பவம் நமது அதிகாரிகளுக்கு இடையே உள்ள தடையற்ற ஒருங்கிணைப்புக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்த முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள் என்று பதிவிட்டுள்ளார்.

## பிரதமர் மோடி பயணம் செய்யவிருந்த விமானத்தில் கோளாறு



ராஞ்சி, நவ.16

பிரதமர் மோடி ஜார்க்கண்ட் சென்றுள்ளார். அவர் ஜார்க்கண்ட் மாநிலம் தியோகரியில் இருந்து விமானம் மூலம் தலைநகர் டெல்லி திரும்பவிருந்தார்.

இந்நிலையில் , பிரதமர் மோடி பயண்ம செய்யவிருந்த விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால், அவர் டெல்லிக்கு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அவர் விமான நிலையத்தில் காத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## நடப்பு ஆண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 7.2 சதவீதமாக இருக்கும் சர்வதேச ஆய்வு நிறுவனம்




டெல்லி, நவ.16

சர்வதேச நிறுவனங்கள், நாடுகளின் நிதி நிலை, பொருளாதாரம், ஜிடிபி வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளை வெளியிடும் சர்வதேச ஆய்வு நிறுவனம் 'மூடி'. அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் இந்த ஆய்வு நிறுவனம் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி குறித்து ஆய்வு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்படி, நடப்பு ஆண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 7.2 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதேபோல், 2025ம் ஆண்டு இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 6.6 சதவீதமாகவும், 2026ம் ஆண்டு 6.5 சதவீதமாகவும் இருக்கும் என்று மூடி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## உலகின் மிகப்பெரிய பவளப்பாறை கண்டுபிடிப்பு

ஹொனிரா, நவ.16

உலகின் மிகப்பெரிய பவளப்பாறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பசுபிக் கடலின் தென்கிழக்கே சாலமன் தீவுக்கூட்டம் அருகே இந்த பவளப்பாறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சாலமன் தீவுக்கூட்டத்தில் திரி சிஸ்ட்சர் தீவுக்கூட்டம் அருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 34 மீட்டர்அகலம், 32 மீட்டர் நீளம், 5.5 மீட்டர் உயரம் கொண்ட இந்த பவளப்பாறை உலகிலேயே மிகப்பெரிய பவளப்பாறை என்றுஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து ள்ளனர். இந்த பவளப்பாறை 300 முதல் 500 ஆண்டுகள் பழமையானது என்றும், வானில் இருந்து பார்க்கும்போதும் பவளப்பாறை தெரியும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். கடல்வாழ் உயிரினங்களின் வாழ்வில் பவளப்பாறைகள் பெரும் பங்காற்றுகின்றன. தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த பவளப்பாறைகள் தற்போது ஆரோக்கியமான நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ள ஆராய்ச்சியாளர்கள் உலக வெப்பமயமாதல் இந்த பவளப்பாறைக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



## பூரண குறத்தி மானார் மணிக்குறவர் 71ஆவது ஆண்டு நினைவு விழா

திண்டுக்கல், நவ.16

மணிக்குறவர் 71ஆம் ஆண்டு நினைவு விழா சிறப்பாக நடைபெற் றது பல்வேறு கட்சி மற்றும் அமைப்பு களின் நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பு செய்தனர்

பூரண குறத்தி மானார் திரு மணிக்குறவர் 71ஆவது ஆண்டுநி னைவு விழாசிறப்பாகநடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்புவிருந்தினர்களாக நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள், இஸ்லாமிய சங்க நிர்வாகிகள், யாதவர் தேசிய பேரவை நிர்வாகிகள், தாய்நா டுமக்கள் கட்சி நிர் வாகிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள், புரட்சி பாரதம் கட்சி நிர்வா கிகள், யாதவர் பேரவை, திண்டுக் கல் மாவட்ட மணிக் குறவர் விழா குழுவி னர்கள் மற்றும்மதுரை மாவட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் உள் ளிட்டோர் கலந்துகொண்டனர். ஊர் பொதுமக்கள் முன்னிலையில் நிகழ்வு சிறப்புறநடைபெற்றது. விழாவை தத் தனேரி சந்திரசேகர் அவர்கள் ஏற்பாடு செய்தார்.



எம்.முனீஸ்வரன், பி.சுந்தர் மற்றும் எல்.சேகர் ஆகியோர் விழாவை ஒருங் கிணைத்துச் சிறப்பான முறையில் நடத்தி முடித்தனர்.

## பாதை புறம்போக்கு நிலத்தை மீட்டு தர கிராம மக்கள் கோரிக்கை

செஞ்சி நவ16

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட செம்மேடு கிராமத்தில் உள்ள பாதை புறம்போக்கு நிலத்தை மீட்டுத் தரக் கோரி கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

செம்மேடு கிராமத்தில் உள்ள திரு வண்ணாமலை சாலையிலிருந்து பாலப்பாடி வழியாக கலத்தம்பட்டு செல்லும் தார்சாலை சர்வே எண் 1227 /2 எண்ணில் உள்ள பாதை புறம்போக் கில் உள்ள சுமார் 127/2 0.67.5 ஏர்ஸ் உள்ளதாகவும் அதை அருகாமையில் அமைத்துள்ள தனிந பகர் ஆக்கிரமிப்பில் உள்ள ரியல் எஸ் டேட் உரிமையாளர் சொந்தம் கொண்டா டுவதாக பொதுமக் கள் புகார் அளித்துள் ளனர் இது குறித்து செம்மேடு ஊராட்சி மன்ற தலைவர் நீலா வதி பஞ்சாட்சரம், மனு அளிக்க சென்றபோது அவர் அங்கு இல்லாத காரணத்தினால் ஊராட்சி செயலாளரிடம் மனு அளித் தனர் அதைத்தொடர்ந்து கிராம நிர் வாக அலுவலர் முத்து குமாரிடம் நூற் றுக்கும் மேற்பட்ட அப்பகுதி சேர்ந்த பொதுமக்கள் மனு அளித்து ஆக்கிர மித்துள்ள நிலத்தை மீட்டு தர வலியு றுத்தினர் இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது பின் னர் கிராம நிர்வாக அலுவலர் உயர் அதிகாரிகளிடம் தெரிவித்து உரிய நட வடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.



## கொளத்தூர் ஏரி தூர்வாரும் பணியில் செம்மண் திருட்டு சமூக ஆர்வலர்கள் கவலை; அரசு நடவடிக்கை எடுப்பாரா?

சேலம், நவ.16

சேலம் மாவட்டம் மேட்டூர் வட் டம் கொளத்தூர் பேரூராட்சிக்குட் பட்ட சின்ன மேட்டூரில், தமிழ்நாடு நீர்நிலைகள் மேம்பாட்டு அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் 202324 இல் கொளத்தூர் சிறப்பு நிலை பேரூ ராட்சியில் நடந்து வரும் ஏரி தூர்வா ரும் பணிகள் தொடர்பாக சமூக ஆர் வலர்களின் கவலைகள் எழுந்துள்ளன.

இப்பணிகளை ஒப்பந்ததாரர் ராஜேந்திரன் மேற்கொண்டு வருகி றார், மேலும் இதற்காக 98 இலட்சம் மதிப்பீடு செய் யப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன. ஆனால், தூர் வாரும் பணிகளில் அதிக அளவில் செம்மண் தோண்டி விற்பனை செய் யப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்த செம் மண், யூனிட் ஒன்றுக்கு 600 முதல் 800 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக புகார் எழுந்துள் ளது. இதுவரை சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் செம்மண் விற் பனை நடந்திருக்கலாம் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்த விவகாரம் குறித்து, வரு வாய்த்துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது, அவர்கள் பதிலளிக்காததால் அதிகாரி கள் இது குறித்த முறையான கவனிப்பில் இல்லை என்று சமூக ஆர்வலர்கள் வேதனை வெளியிட்டுள்ளனர்.

இது போன்ற கனிம வளங் களின் திருட்டு குறித்து அரசாங்கம் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கும் என அவர்கள் எதிர்பார்க் கின்றனர்.

## சுண்டக்காம்பாளையம் அரசுப்பள்ளியில் குழந்தைகள் தின விழா

ஊத்துக்குளி, நவ.16

சுண்டக்காம்பாளையம் ஊ.ஒ.ந.நி. பள்ளியில் குழந்தைகள் தின விழா மகிழ் முற்றம் துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி தலைமையாசிரியர் சு. காளியப்பன் விழாவிற்குதலைமை ஏற்று வரவேற்புரை வழங்கினார்.

மகிழ்முற்றம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என மாணவர்களை குழுக்களாக பிரித்து மாணவர் தலை வர்கள் மற்றும் குழுவி ற்கான ஆசிரியர்கள் தேர்ந்தெருக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்டனர். மகி ழ்முற்றம் நிகழ்ச்சி களை ஆசிரியர் காயத்திரி வழங்கினார். குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு பேச்சு, பாட்டு, கட்டுரை, ஓவியம் போன்ற போட்டிகள் நடத்தி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.



தாலப்பதி சங்கர் கணேஷ் மளிகை சாற்பில் இனிப்புகள் வழங்க ப்பட்டது. பட்டதாரி ஆசிரியர் அ.ரங்கநாதன் நன்றியுரை கூறினார்.

# நத்தம் பூசாரிபட்டி முத்தாலம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



நத்தம், நவ, 15

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சிறுகுடி கிராமம் பூசாரிபட்டியில் மந்தை முத்தாலம்மன் கோவில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் முதல் நாள் அலங்கரிக்கப்பட்ட யாகசாலையில் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, மஹாகணபதி ஹோமம், மகாலெட்சுமி ஹோமம் மற்றும் முதல் காலயாக பூஜைகள் நடந்தது.தொடர்ந்து நேற்று முன்தினம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கால யாகசாலை பூஜைகள் நடந்தது. பின்னர் அதே யாகசாலையில் நேற்று நான்காம் கால யாகசாலை பூஜைகளை தொடர்ந்து காசி, ராமேஸ்வரம், கங்கை, காவேரி, கரந்தமலை அழகர்மலை, திருமலைக்கேணி உள்ளிட்ட பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்டிருந்த தீர்த்த குடங்கள் மேளதாளம் முழங்க, ஊர்வலமாக கோபுர உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டது. பின்னர் அங்கு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மேளதாள இசையுடன் புனித நீர் கலசத்தில் ஊற்றப்பட்டது. அப்போது வானத்தில் கருடன் வட்டமிட்டது. தொடர்ந்து மூலவர் சன்னதிகளில் சிறப்பு அபிஷேகமும் தீபாராதனையும் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலை சுற்றி நின்று சாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு புனித தீர்த்தமும் பூஜை மலர்களும் வழங்கப்பட்டது. தொடர்ந்து பக்தர்களுக்கு அறுசுவை உணவு அன்னதானம் வழங்கபட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை பூசாரிபட்டி கிராம ஊர் பொதுமக்கள், திருப்பணிகுழுவினர், காரணக்காரர்கள் செய்திருந்தனர்.

# ஆலங்குளம் பகுதியில் நான்கு வழிச்சாலை பீகார் மாதிரி இருட்டாக உள்ளது: தென்காசி மாவட்ட எஸ்பி ஆவேசம்



ஆலங்குளம், நவ.16

தென்காசி நெல்லை நான்கு வழிச்சாலை பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. இந்த சாலையில் பல்வேறு இடங்களில் அனுமதி பெற்றும், சில இடங்களில் அனுமதி இல்லாமலும் குறுக்கே பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் அந்த பாதையின் அருகில் பேரிகார்டு என்கிற போர்வையில் தனியார் நிறுவனங்களின் விளம்பர பதாதைகள் வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் சில பேரிகார்டுகள் மிக உயரமாக உள்ளது. இதனால் இரு சக்கர வாகன ஓட்டிகள் அந்த பகுதியில் குறுக்கே வரும் வாகனங்கள் கண்ணுக்கு தெரியாமல் திடீரென வரும் போது நிலை தடுமாறி விபத்துக் கள் ஏற்படுகிறது. நாளுக்கு நாள் தென்காசி நெல்லை நான்கு வழிச்சாலையில் தென்காசி மாவட்டத்தில் அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. இதனால் விபத்தினை தடுக்கும் வண்ணம் தென்காசி மாவட்ட போலீஸ் சூப்பிரெண்ட் சீனிவாசன் நேற்று மாலை தென்காசி, பாவூர் சத்திரம் மற்றும் ஆலங்குளம் வரை விபத்துக்கள் அதிகம் ஏற்படும் இடங்களை ஆய்வு செய்தார். அதன் பின் நெடுஞ்சாலை அரசு ஒப்பந்ததாரரின் திட்ட மேலாளர் கோஸ்மின் என்பவரை அழைத்து இந்த சாலையில் விபத்து நடக்கும் முக்கிய இடங்களில் மூன்று அடுக்குகள் கொண்ட வேகத்தடைகள் அமைக்க வேண்டும். வாகன ஓட்டிகள் வேகத் தடை அருகில் வரும்போது நெடுஞ்சாலைத்துறையினரையும் காவல் துறையினர் மீதும் கோபபட்டால் நாம் விபத்தை குறைக்க நடவடிக்கை எடுத்ததாக அர்த்தம். மேலும் ஆலங்குளம் பகுதியில் நான்கு வழிச்சாலை பீகார் மாதிரி இருட்டாக உள்ளது. வெளிச்சத்தை ஏற்படுத்தி விபத்துக்கள் நடப்பதை மூன்று நாட்களுக்குள் சரி செய்ய வேண்டும் என கூறினார்.

அப்போது அவருடன் ஆலங்குளம் டிஎஸ்பி ஜெயபால் பர்ணபாஸ், ஆர்டிஓ கனகவல்லி, தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் மகேஷ் குமார், மாவட்ட குற்ற ஆவண காப்பக இன்ஸ்பெக்டர் சரஸ்வதி, ஆலங்குளம் இன்ஸ்பெக்டர் காசிப்பாண்டி, பாவூர்சத்திரம் இன்ஸ்பெக்டர் செந்தில் உட்பட பல்வேறு அதிகாரிகள் உடனிருந்தனர்.



திருப்பூர் மாநகர மாவட்ட தலைவர் மகாலிங்கம் தேவர் பிறந்தநாள் விழா தமிழ் மாநில பொது செயலாளர் மற்றும் வருங்கால சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கர்ணன் தேவர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இதில் திருப்பூர் மாநகர மாவட்ட செயலாளர் க. மகேஷ் குமார் தேவர், மாவட்ட துணை தலைவர் ஆர்.ரவி, மாநகர செயலாளர் டி.காளிஸ்வரன், மாவட்ட தொழிற்சங்க பொது செயலாளர் பசும்பொன் பிரபு தேவர் மற்றும் பல நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் புதிய திட்டப்பணிகள்: அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்



திருப்பூர், நவ.16

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் உடுமலைப்பேட்டை வருவாய் கேட்டாட்சியர் குமார் தலைமையில், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் 15 வது நிதிக்குழு மானியம் கீழ் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் தார் சாலை, கான்கிரீட் சாலை மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் திருமூர்த்தி அணை தளி வாய்க்காலை நீராதமாகக் கொண்ட பகுதிகளுக்கு கற்காரை குழுய்களுக்கு பதிலாக நெகிழிரும்பு குழாய்களாக மாற்றும் பணிகளை துவக்கி வைத்தார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது,

காங்கேயம்ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் இன்றைய தினம் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி, கணக்கம்பாளையத்தல் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் ரூ.81 இலட்சம் மதிப்பீட்டில் ஜெய்சக்தி நகர், ராய்லட்சுமி நகர், மாதா லேஅவுட், சாரதா லேஅவிட், எம்.ஜி.ஆர் நகர், முத்து கோபால் லேஅவுட், வி.கே.பி லேஅவுட், அருண் நகர் ஆர்ஜி நகர் காந்திபுரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிகளையும், ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் எம்.ஜி.ஆர் நகர், ராயல் நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் கான்கிரீட் சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தும், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள திருமூர்த்தி அணை தளி கால்வாயை ஆதாரமாகக் கொண்டு 5 பேரூராட்சிகள் மற்றும் உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் ஒன்றியங்களில் உள்ள 318 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் தற்போதுள்ள பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர் திட்டம், கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் மடத்துக்குளம் கூட்டுக் குடிநீர் திட்டம் மறுதொகுப்பு செய்தல் மற்றும் உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் ஒன்றியங்களில் விடுபட்ட குடியிருப்புகள் என மொத்தம் 318 குடியிருப்புகள் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தனி, கணியூர், மடத்துக்குளம், குமரலிங்கம் மற்றும் சங்கரமநல்லூர் பேரூராட்சிகள் பயன் பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளது என அமைச்சர் .பெ.சாமிநாதன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், நிர்வாக பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) முருகேசன், உதவி நிர்வாக பொறியாளர்கள் விஜயலட்சுமி, செல்வராணி, பிரகாஷ், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் மகாலட்சுமி முருகன், உடுமலைப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுரேஷ் குமார், சிவகுருநாதன், உதவி பொறியாளர் சுப்பிரமணி, கணக்கம்பாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் காமாட்சி அய்யாவு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# குடியாத்தத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஊட்டச்சத்து திட்டத்தின் 2ம் கட்ட தொடக்க விழா



வேலூர், நவ.16

வேலூர் மாவட்டம் குடியாத்தம் சட்டமன்ற தொகுதியில் உள்ள எர்த்தாங்கள் ஊராட்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் ஊட்டச்சத்து திட்டத்தின் இரண்டாம் கட்ட தொடக்க விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி. அமலு விஜயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஊட்டச்சத்து பெட்டகங்களை பெற்றோர்களுக்கு வழங்கினார். மேலும், நிகழ்வில் பேர்ணாம்பட்டு ஒன்றிய பெருந்தலைவர் சித்ரா ஜனார்த்தனன், மாவட்ட திட்ட அலுவலர் குழந்தை வளர்ச்சி சாந்தி பிரியதர்ஷினி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் உத்தரகுமாரி, வட்டார குழந்தைகள் வளர்ச்சி அலுவலர் சமீம், வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஊராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளின் மத்தியில் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

# இராமேஸ்வரத்தில் பல்வேறு திட்டங்கள் திறந்து வைப்பு: பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதிய கட்டிடங்கள்



இராமேஸ்வரம், நவ.16

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சி முத்துராமலிங்கம் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து பல்வேறு புதிய கட்டிடங்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. 16வது வார்டில் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கடையும், 17வது வார்டில் கடற்கரை மாரியம்மன் கோவில் தெருவில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கமும் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு திறந்து விடப்பட்டது. மேலும், வேர்கோட் பகுதியில் தேவர் திருமகன் பெயரில் ஆட்டோ ஓட்டுனர் தொழிலாளிகளுக்காக புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டது. இந்நிகழ்வில் இராமேஸ்வரம் நகர கழக செயலாளர் கே.ஈ. நாசர்கான், நகர மன்ற தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு திருப்பணிகளுக்கு ஒத்துழைப்பு அளித்தனர்.

# புதுக்கோட்டையில் கார்த்திகை மாதம் பிறப்பதையொட்டி புதுகை காதிபவனில் களைகட்டிய துளசி மாலை ருத்ராட்சமாலை விற்பனை



புதுக்கோட்டை, நவ.16

கார்த்திகை மாதப்பிறப்பு நெருங்கி வரும் நிலையில் புதுக்கோட்டை காதிபவனில் ருத்ராட்சமாலை துளசி மணி மாலை விற்பனை களைகட்டியுள்ளது.

புதுக்கோட்டையில் கீழ ராஜ வீதியிலுள்ள காதிபவனில் சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு பழனிக்கு பாதயாத்திரை செல்பவர்களும் விரதம் மேற்கொள்வதற்காக துளசி மணி மாலை மற்றும் ருத்ராட்ச மாலைகளை ஐயப்ப பக்தர்கள் வாங்கி செல்கின்றனர்

வருகின்ற 16.11.2024 ஆம் தேதி சனிக்கிழமை கார்திகை மாதம் பிறக்கிறது. கார்த்திகை முதல் நாளில் மண்டல பூஜைக்காக சபரிமலைக்குச் செல்பவர்கள் மாலை அணிந்து விரதம் மேற்கொள்கின்றனர். சபரிமலை ஐயப்ப சுவாமிக்கு விரதமிருந்து மாலை அணியும் பக்தர்கள், அதற்கான பூஜைப் பொருள்களை ஆர்வத்துடன் வாங்கி வருகின்றனர்.கார்த்திகை முதல்நாளில் ஐயப்ப சுவாமிக்கான விரதத்தை தொடங்கும் பக்தர்கள். ஐயப்பன் கோயில் அல்லது மாரியம்மன் கோவில், முருகன் கோயில்களுக்குச் சென்று துளசி மணி மாலை அணிந்து கொள்வது வழக்கம்.இந்நிலையில், விரதத்துக்கான பொருள்கள், பூஜை பொருள்கள் விற்பனை புதுக்கோட்டை கீழ ராஜ வீதிலுள்ள காதி பவனில் துளசி, சந்தனம், மணி மாலை ஆகியவை, கோர்க்கப்பட்டு சுவாமி உருவம் பொறித்த டாலர்கள் ,வேட்டிகள் விற்பனைக்கு குவிந்துள்ளன.

இது குறித்து காதி பவன் நிர்வாகி ரமேஷ் கூறுகையில், துளசிமாலை ருத்திராட்ச மாலை மணி மாலைகள் பல்வேறு அளவுகளிலும் விற்பனைக்கு வைத்துள்ளோம். மேலும், கேரளாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மாலைகளில் 54 மற்றும் 108, எண்ணிக்கையில் மணிகள் இருக்கும். இதேபோன்று ஐயப்பன், முருகன்,உருவ டாலர்கள் மும்பையிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. மேலும் சிவப்பு, மஞ்சள், பச்சை, கருப்பு, நீலம், காவி போன்ற வண்ணங்களில் வேட்டிகளும் இருக்கின்றன. எங்களிடம் ஐயப்ப பக்தர்கள் பழனி பாதயாத்திரை பக்தர்ககார்த்திகை பிறப்பு முதல் நாள்,ளும் வாடிக்கையாளர்கள் வாங்கி செல்கின்றனர் என்று கூறினார் .

கேரளம் மாநிலத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் விரதமிருந்து செல்கின்றனர். இதற்காக, கார்த்திகை முதல் நாளில் மாலை அணிந்து விரதத்தை தொடங்குகின்றனர். ஒரு மண்டலம் விரதம் மேற்கொண்டு, மகர ஜோதியைக் காண பலரும் செல்வர். அதுவரை தினமும் காலை, மாலை வேளை களில் குளித்து சரண கோஷம் சொல்லி, ஐயப்பனை வணங்கி விரதம் மேற்கொள்கிறார்கள். சபரிமலைக்கு தமிழகத்தில் இருந்துதான் அதிகமான பக்தர்கள் செல்கின்றனர்.

# குடியாத்தம்: விவசாயிகள் குறை தீர்வு கூட்டத்தில் முக்கிய கோரிக்கைகள் வலியுறுத்தல்



குடியாத்தம், நவ.16

விவசாயிகள் குறைத் தீர்வு நாள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு வட்டாட்சியர் மெர்லின் ஜோதிகா தலைமை தாங்க, வேளாண்மை துறை உதவி இயக்குனர் உமாசங்கர் முன்னிலை வகித்தார். துணை வட்டாட்சியர் உதயகுமார் வரவேற்றார்.விவசாயிகள் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள்: – உழவர் சந்தைக்கு கூடுதல் இடம் ஒதுக்கீடு: குடியாத்தம் பகுதியில் உள்ள உழவர் சந்தையின் பயன்பாட்டிற்காக அதிக இடம் ஒதுக்க வேண்டும். – கால்நடை சந்தை அமைப்பு: கால்நடை சந்தைக்கு பொருத்தமான இடம் தேர்ந்தெடுத்து அமைக்க வேண்டும். – பேருந்து வசதி: – குடியாத்தம் முதல் மாதனூர் வரை. – குடியாத்தம் முதல் அகரம் சேரி வரை. செருவங்கி ஏரி தூர் நீக்கம்: ஏரியின் கால்வாய்களை சுத்தம் செய்து நீர்ப்பாசன வசதி மேம்படுத்த வேண்டும்.இக்கூட்டத்தில் நகராட்சி ஆணையாளர் மங்கையர்க்கரசன், தோட்டக்கலை அலுவலர் தமிழரசி, விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் சம்பத் நாயுடு, சேகர், பழனியப்பன் ஆகியோர் உட்பட 13 துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். விவசாயிகளின் கோரிக்கைகளை அரசு துறைகளின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வுகள் காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது.

# குன்றத்தூர் முருகன் கோவிலில் ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 6 திருமண மண்டபங்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார்




குன்றத்தூர், நவ.16

பிரசித்தி பெற்ற அருள் மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் திருமண மண்டப வசதியை அதிகரிக்கும் நோக்கில் ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் ஆறு புதிய திருமண மண்டபங்கள் கட்டப்பட்டன. முகூர்த்த நாட்களில் அதிக திருமணங்கள் நடைபெறும் இந்த கோவிலில், போதிய இட வசதியின்மையால் திருமண ஏற்பாடுகளில் சிரமம் ஏற்பட்டதால், கோவில் பின்புறம் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் மண்டபங்களின் கட்டுமானப் பணி தொடங்கியது. இந்த திருமண மண்டபங்கள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் அவற்றை திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொடுத்தார். நிகழ்வில் கோவில் நிர்வாகத்தினர், அறங்காவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு இனிப்புகள் வழங்கப்பட்டன.

# பாம்பன் புதிய பாலத்தில் 2வது நாளாக அதிர்வுகள் உறுதி தன்மையை ஆய்வு செய்ய 80 கி.மீ. வேகத்தில் ரெயிலை இயக்கி சோதனை

மண்டபம், நவ.16

ராமேசுவரம் தீவினை இந்தியாவுடன் இணைக்கும் பாம்பன் ரெயில் பாலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினைகள், தூக்குப் பாலத்தில் ஏற்பட்டுள்ள விரிசல் காரணமாக புதிய ரெயில் பாலம் கட்டுவதற்கு பிரதமர் மோடி 1.03.2019 அன்று அடிக்கல்நாட்டினார். அதற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கிதற்போது நிறைவடைந்துள்ளது.



2,078 மீட்டர் நீள புதிய பாலம், கடல் மட்டத்திலிருந்து 7 மீட்டர் உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது. 101தூண்களைக்கொண்ட இந்த பாலத்தில் 60 அடி நீளம் கொண்ட 99 இணைப்பு கர்டர்கள் பொறுத்தப்பட்டு பாலத்தின் மையப்பகுதியில் கப்பல்கள் செல்வதற்கு வசதியாக 77 மீட்டர் நீளம், 27 மீட்டர் உயரத்திற்கு ஹைட்ராலிக் லிப்ட் மூலம் இயங்கக் கூடிய செங்குத்து தூக்கு பாலமும் அமைக்கப்பட்டுள்ளது.

பாம்பன் கடலில் புதிய ரெயில் பாலத்தின் கட்டுமான பணிகள், தண்டவாளங்கள், கர்டர்கள் மற்றும் பாலத்தின் நடுவே கப்பல்கள், படகுகள் கடந்து செல்வதற்கு செங்குத் தூக்குப் பாலத்தை பொறுத்தும் பணிகள் முடிந்து, அதனை தூக்கி இறக்கும் சோதனை, ரெயில்கள் சோதனை ஓட்டமும் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இறுதிகட்டமாக ரெயில்வே பாதுகாப்பு ஆணையம் சார்பாக இரண்டு நாள் ஆய்வு பாம்பனில் ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம். சவுத்ரி தலைமையில் தொடங்கியது. இதில் ரெயில்வே அதிகாரிகள், பாம்பன் அக்காள் மடத்தில் உள்ள ரெயில்வே கேட்டில் இருந்து டிராலி மூலம் சென்று பாம்பன் ரெயில் நிலையம், பாம்பன் தெற்குவாடி ரெயில்வே கேட், புதிய பாம்பன் பாலம், புதிய பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள செங்குத்து தூக்குப்பாலம், இதற்காக நடுக்கடலில் அமைக்கப்பட்டு உள்ள கட்டுப்பாட்டு அறை, பாலத்தில் உள்ள சிக்னல்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தனர்.

மேலும், சின்னப்பாலம் ரெயில்வே கேட்டில் இறங்கி, புதிய வழித்தடத்தின் செயல் பாடுகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் வழிகாட்டு முறைகள் குறித்தும் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு மேற்கொண்டார். காற்றின் வேகம், நிலையை கண்காணிப்பதற்கான அனிமோ மீட்டர் அமைப்பு மற்றும் பாலத்தின் சிக்னல் அமைப்புகளையும் அவர் ஆய்வு செய்தார்.

தூக்குப் பாலத்தை இயக்கும் ஆபரேட்டர் அறைக்குள் சென்று அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டார். பின்னர் தூக்குப்பாலத்தில் இருந்துமண்டபம் நோக்கி உள்ள ரெயில் பாலத்தை முழுமையாக ஆய்வு செய்து மாலை 6 மணிக்கு முதல்கட்ட ஆய்வை நிறைவு செய்தார். சுமார் 10 மணிநேரம் நடந்த ஆய்வில் புதிய பாலத்தில் ரெயிலை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகள் குறித்து உறுதி செய்யப்பட் டது. மேலும் தூக்கு பாலத்தை திறந்து அதன் வழியாக கப்பல்களை இயக்கியும் சோதனை செய்யப்பட்டது.

இரண்டாவது நாளான இன்று முக்கிய அம்சமாக மண்டபம் ரெயில் நிலையத்திலிருந்து புதிய பாம்பன் ரெயில் பாலம் வழியாக பாம்பன் ரெயில் நிலையம் வரையிலும் ரெயிலை இயக்கி சோதனை நடத்தப்பட்டது. அப்போது 4 பெட்டிகளுடன் 80 கிலோ மீட்டர் வேகத்தில் ரெயில் இயக்கப்பட்டது. குறிப்பாக செங்குத்து தூக்கு பாலத்தின் அதிர்வுகள், உறுதித் தன்மை தொடர்பாக பாதுகாப்பு ஆணையர் ரெயில் பயணம் செய்தவாறு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் தலைமை திட்ட மேலாளர் கமலாகர் ரெட்டி, தலைமை நிர்வாக அதிகாரி அமித்குமார் மனுவால், மதுரை ரெயில்வே கோட்ட மேலாளர் ஷரத் ஸ்ரீவத்சவா மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த ஆய்வு தொடர்பான அறிக்கை மத்திய ரெயில்வே அமைச்சகத்திடம் விரைவில் தாக்கல் செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் இந்த மாத இறுதிக்குள் பாம்பன் புதிய ரெயில் பாலம் திறப்பு விழாதேதி முறைப்படி அறிவிக்கப்படும், என்றும் அதில் பிரதமர் மோடி கலந்துகொள்வார் என்றும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# மருத்துவர்களை தாக்கும் நபர்கள் மீது ஜாமீனில் வெளியே வர முடியாத படி கடுமையான சட்டங்கள் இயற்ற வேண்டும்: பிரகாசம்

சேலம், நவ.16

இந்திய மருத்துவ சங்கத்தின் முன்னாள் தேசிய துணை தலைவர் மற்றும் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் பிரகாசம் சேலத்தில் இன்று நிருபர்களிடம் கூறியதாவது:



தமிழகத்தில் மருவத்துவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். மருத்துவர் மீது தாக்குதல் சம்பவங்களுக்கு கடந்த 2008 ஆம் ஆண்டு ஜாமீனில் வெளியே வர முடியாத அளவிற்கு5 வருட சிறை தண்டனை அறிவிக்கப்பட்டது. ஆனால் 16 ஆண்டுகள் ஆகியும் நூற்றுக்கணக்கான மருத்துவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதுவரை 11 பேர் மீது மட்டுமே வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது . ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காரணம் குற்றவாளிகள் அதிகார பலம், ஆள் பலம் மிக்கவர்களாக உள்ளதால் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க தயங்குகின்றனர். நேற்று மருத்துவர் மீது நடைபெற்ற தாக்குதல் சம்பவத்துக்கு குற்றம் சாட்டப்பட்டவர் மீது எந்த வழக்கு போடுவது என்று தெரியாத அளவிற்கு காவல் துறையினர் உள்ளனர்.

எந்த மருத்துவரும் தவறு செய்ய வேண்டும் என்ற நோக்கில் செயல்படுவது இல்லை. இனி வரும் காலங்களில் அரசு மருத்துவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இல்லையென்றால் தமிழகத்தில் மருத்துவர்களும் மருத்துவமனைகளும் இல்லாமல் போய்விடும்.

தற்போது நடைபெற்ற சம்பவத்திற்கு தமிழக முதல்வர் தொலைபேசியில் பேசியது பாராட்டுக்குரியது. இனி வரும் காலங்களில் குற்ற சம்பவங்கள் நடைபெற்றால் 12 மணி நேரத்தில் வழக்கு பதிவு செய்ய வேண்டும் .15 நாட்களுக்குள் குற்ற நகல் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

மேலும் மருத்துவமனையில் முக்கிய இடங்களுக்கு மருத்துவமனை நிர்வாகமும் காவல்துறையும் பாதுகாப்பு வழங்க வேண்டும். மேலும் குற்றம் செய்யும் நபர்கள் மீது ஜாமீனில் வெளியே வர முடியாத அளவிற்கு கடுமையான சட்டங்கள் கொண்டு வர வேண்டும். மருத்துவர்கள் மீதான தாக்குதல் குறித்து எங்கள் கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளது. கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு நிறைவேற்றப்படவில்லைஎன்றால்போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது இந்திய மருத்துவ சங்கத்தின் சேலம் மாவட்ட தலைவர் சாது பகத்சிங், செயலாளர் குமார், தலைவர் தேர்வு மோகனசுந்தரம் ,துணைத் தலைவர் ராஜேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கோவை மாநகராட்சியின் 35வது வட்டத்திற்குட்பட்ட ராஜீவ காந்தி வீதி 1 மற்றும் 2ஆம் தெருவுகளை இணைக்கும் குறுக்குப் பாதையில் புதிய மழை நீர் வடிகால் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகளை நேரில் ஆய்வு செய்த மாமன்ற உறுப்பினர் சம்பத், இப்பகுதி மக்கள் பணியில் தொடர்ந்து களமிறங்கி செயற்பட்டு வருகிறார்.

# பாஜகவுடன் கூட்டணி இல்லை: இபிஎஸ் மீண்டும் உறுதி

கிருஷ்ணகிரி, நவ.16

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ பாஜகவுடன் கூட்டணி இல்லை.

★ ஒத்த கருத்துடைய கட்சிகளை ஒன்றிணைத்து 2026 சட்டமன்ற தேர்தலுக்கு அதிமுக மெகா கூட்டணி அமைக்கும்.

★ அதிமுக அமைக்கும் மெகா கூட்டணியில் பாஜக இருக்காது. ★ பாஜகவோடு கூட்டணி இல்லை என்பதை பல இடங்களில் தொடர்ந்து பதிவு செய்து வருகிறேன். ★ பாராளுமன்ற தேர்தலில் பாஜகவோடு கூட்டணி இல்லை தெளிவுபடுத்தி விட்டோம். அடுத்து வரும் சட்டமன்ற தேர்தலிலும் பாஜகவோடு கூட்டணி இல்லை என்பதை தெளிவுபடுத்தி விட்டோம். அதை தவிர்த்து தான் பேசிக்கொண்டிருக்கிறோம். மீண்டும் மீண்டும் இந்த கேள்வியை எழுப்ப வேண்டாம். ★ மக்கள் விரோத திராவிட முன்னேற்ற கழக அரசு அகற்றப்பட வேண்டும்.

★ நான் வேண்டுகோள் விடுப்பது மற்ற கட்சிகளுக்கு தான்.

★ ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் செல்வாக்கு உள்ள ஒரே கட்சி அதிமுக கட்சி தான்.

★ அதிமுக ஆட்சியில் தான் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலும், புரட்சி தலைவி காலத்திலும், அம்மா மறைவுக்கு பின் அம்மாவுடைய அரசும் சரி நிறைய திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்ற ப்பட்டு, இன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்க அதிமுக அரசு தான் காரணம் என்று கூறினார்.

# வேலம்பட்டியில் நீர்நிலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட சுங்கச்சாவடி அலுவலக கட்டிடத்தை இடிக்கும் பணி தொடக்கம்



திருப்பூர், நவ.16

திருப்பூர் வேலம்பட்டியில் நீர்நிலையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட சுங்கச்சாவடி அலுவலக கட்டிடத்தை இடிக்கும் பணிகள் தொடங்கியது. வேலம்பட்டி என்ற இடத்தில் தேசிய நெடுஞ்சாலைத் துறை சார்பில் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. நீர்நிலையை ஆக்கிரமித்து சுங்கச்சாவடி கட்டப்பட்டுள்ளதாக விவசாயிகள், பொதுமக்கள் குற்றச்சாட்டு வைத்தனர். திருப்பூர் மாவட்டம்அவினாசி முதல் அவினாசிபாளையம் வரை சுமார் 32 கிலோமீட்டர் தூரத்திற்குத் தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது .

இந்த நெடுஞ்சாலையில் வேலம்பட்டி என்ற இடத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டது. இருப்பினும் இந்த சுங்கச்சாவடி நீர் நிலையை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. எனவே இந்த கட்டிடத்தை இடிக்கக் கோரி தொடர்ச்சியாகக் கடந்த சில வருடங்களாக அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனால் சுங்கச்சாவடி திறக்கப்படாமல் இருந்து வந்தது.

இத்தகைய சூழலில் தான் கடந்த 10 நாட்களுக்கு முன் சுங்கச்சாவடி திறக்கப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகி இருந்து. இந்த தகவலையடுத்து பொதுமக்கள் சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி இருந்தனர். அப்போது மாவட்ட நிர்வாகம் சார்பில், “சுங்க கட்டணம் வசூலிப்பது குறித்து அமைதிப் பேச்சுவார்த்தைக்குப் பின் முடிவு எடுக்கப்படும்” எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நள்ளிரவு 12 மணி முதல் சுங்கச்சாவடி மீண்டும் திறக்கப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் சுங்க கட்டணம் வசூல் செய்யப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகி இருந்தது. அதனைத் தொடர்ந்து அப்பகுதியைச் சேர்ந்த ஓட்டுநர்கள், லாரி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என 100க்கும் மேற்பட்டோர் சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “நீர் நிலையை ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட சுங்கச்சாவடியை அகற்ற வேண்டும். பால் வண்டி, காய்கறிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு சுங்க கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும். அப்பகுதியைச் சேர்ந்த 6 கிராம மக்களுக்கும், திருப்பூர் பதிவு கொண்ட வாகனங்களுக்கும் விலக்களிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்

போராட்டதையடுத்து நீர்நிலை ஆக்கிரமிப்பில் இருந்த சுங்கச்சாவடி அலுவலக கட்டடம் அகற்றப்படும் என ஆட்சியர் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது. ஆட்சியரின் உத்தரவை அடுத்து ஆக்கிரமிப்பில் இருந்த சுங்கச்சாவடி அலுவலக கட்டடத்தை இடிக்கும் பணிகள் தொடங்கின.

# ராஜபாளையத்தில் நேரு பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

ராஜபாளையம், நவ.16

ராஜபாளையம், பஞ்சு மார்க்கெட்டில் உள்ள பண்டித ஜவஹர்லால் நேரு சிலை பராமரிப்பு குழுவின் சார்பில் நேருவின் 136 ஆவது பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு குழு தலைவர் என்.ஆர். கிருஷ்ணமூர்த்தி ராஜா தலைமை வகித்தார். என்.ஏ.ராமச்சந்திர ராஜா அறக்கட்டளை உறுப்பினர் என்.கே.ராம் விஷ்ணுராஜா வரவேற்று பேசினார்.. விழாவில், வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் எம். அசோக்பாபு நேரு சிலைக்கு மாலை அணிவித்து




சிறப்புரை யாற்றினார்கள். அவர் ஆற்றிய உரையில், ஜவஹர்லால் நேரு குழந்தைகளிடம் அளவுகடந்த அன்பு காட்டியவர்; காரணம், இன்றைய குழந்தைகள்தான் நாளைய தலைவர்கள் என்பதை நேரு உறுதியாக நம்பினார். அவரது நம்பிக்கைக்கேற்ப மாணவ மணிகள் திறம்பட கற்று நாட்டிற்குப் பாடுபட வேண்டும்; ஒழுக்கம், பண்பாடுகளுடன் சிறந்து விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.. தொடர்ந்து, மாணவன் வேல்ராஜ் ‘மணிதருள் மாணிக்கம்‘ என்னும் தலைப்பில் பேசினார். விழாவில், நகர போக்குவரத்துக் காவல்துறை ஆய்வாளர் சீமான் வாழத்துரை வழங்கினார். விழாவில், போக்குவரத்துக் காவல்துறைத் துணை ஆய்வாளர் .பரமசிவம், ராமகாளிதாஸ், சுரேஷ், என்.ஏ.ராமச்சந்திர ராஜா அறக்கட்டளை உறுப்பினர் என்.கே. ராம்வெங்கட் ராஜா, ரகுநந்த ராஜா, ந.அ.அன்னபராஜா நினைவு மேல்நிலைப்பள்ளி, என்.ஏ.ராமச்சந்திர ராஜா குருகுலம் ஆரம்பப் பள்ளி, முருகன் நடுநிலைப் பள்ளி மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், பொது மக்கள் எனத்திரளானோர் கலந்துகொண்டனர்.

# உசிலம்பட்டி அருகே அமமுக நிர்வாகியின் இல்ல திருமண விழா: அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பங்கேற்பு

உசிலம்பட்டி, நவ.16

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே கருமாத்தூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகி கரிசல்ராஜா என்பவரின் இல்ல திருமண விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில் அமமுகவின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பங்கேற்று மணமக்கள் பிரபுதேவா, நீது ஆகியோர்களை



வாழ்த்தினார். இதில் மதுரை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் டேவிட் அண்ணாதுரை உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், ஒன்றிய செயலாளர்கள் உள்ளிட்ட அமமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். விழாவிற்கு வருகைதந்த அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரனுக்கு பட்டாசு வெடித்தும், சால்வை அணிவித்தும் உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

# ஈரோடு மாநகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாவட்டத் தலைவர் திருச்செல்வம் தலைமையில் நேரு பிறந்த நாள் நிகழ்வு

ஈரோடு, நவ.16

ஈரோடு மாநகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாவட்டத் தலைவர் திருச்செல்வம் தலைமையில் ஆசிய ஜோதி முதல் சுதந்திரம் இந்தியாவின் பிரதமர் ஜவஹர்லால் நேரு பிறந்தநாள் நிகழ்வு கொண்டாடப்பட்டது இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர் இ ஆர் ராஜேந்திரன்



மாநகர காங்கிரஸ் கமிட்டி துணை தலைவர் ராஜேஷ் ராஜப்பா மாவட்ட செயலாளர் கோபி பாஸ்கர்ராஜ் மண்டல தலைவர் ஜாபர் சாதிக் மாநில பொதுக்குழு உறுப்பினர் மாரியப்பன் மகளிர் அணி தலைவி ஞானதீபம் முன்னாள் துணை மேயர் பாபு என்கிற வெங்கடாசலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தொழிலாளர் யூனியன் மாநில துணைத்தலைவர் எம் ராஜேந்திரன் சேவதள துணைத் தலைவர் குமரேசன் நெசவாளர் அணி தலைவர் மாரிமுத்து ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# தாசில்தார் அலுவலகத்தில் துணை முதலமைச்சர் 'திடீர்' ஆய்வு

சென்னை, நவ.16

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தூத்துக்குடியில் தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்ற பின் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

பின்னர் அவர் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் அரசின் திட்டங்கள் குறித்த கலந்தாய்வு கூட்டத்திதில் கலந்து கொள்ள சென்றார்.



அப்போது டூவிபுரத்தில் உள்ள வருவாய் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று 'திடீர்' ஆய்வு செய்தார். அப்போது தாசில்தார் சுப்பையா மற்றும் அதிகாரிகளிடம், பொதுமக்கள் அளிக்கும் பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட மனுக்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காலதாமதம் செய்யக்கூடாது என்று கூறினார்.

தொடர்ந்து அரசின் திட்டங்கள் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் பொதுமக்கள் அளிக்கும் பட்டா விண்ணப்பங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அதனை முடித்து வெளியே வந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் சாலையில் திரண்டிருந்த பொது மக்கள் கோரிக்கை மனுக்களை வழங்கினர். அப்போது மேயர் ஜெகன் பெரியசாமி உடன் இருந்தார்.

# திருநெல்வேலி மாவட்டம் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மண்டல இணை ஆணையர் அலுவலகம் கட்டும் பணிகள் தொடக்கம்



நெல்லை, நவ.16

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருநெல்வேலி மண்டல இணை ஆணையர் அலுவலகத்திற்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடப் பணிகளை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, பாளையங்கோட்டை ஆயுதப்படை மைதான சாலையில் மண்டல இணை ஆணையர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கா.ப.கார்த்திகேயன், பூமி பூஜை செய்து, கல்வெட்டினை திறந்து வைத்தார்கள். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு திருக்கோயில்களில் குடமுழுக்கு, திருத்தேர்களை பழுதுபார்த்தி வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம் போன்ற பல்வேறு திட்டங்களை இந்து சமய அறநிலையத்துறை வாயிலாக சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் காணொலி காட்சி வாயிலாக இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.190.41 கோடி மதிப்பீட்டிலான 29 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.42.75 கோடி செலவிலான 27 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

# கடலூர் மாவட்டத்தில் 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி




கடலூர், நவ.16

கடலூர் டவுன்ஹால் அருகே 71 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா2024 முன்னிட்டு கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட்டுறவு கொள்கைகள் மற்றும் கூட்டுறவு இயக்கத்தின் செயல்பாடுகள் மக்களை சென்றடையும் வகையில் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஜயப்பன் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தொடர்ந்து, கூட்டுறவு சங்கங்களின் கடலூர் மண்டல இணைப் பதிவாளர் அலுவலக வளாகத்தில் கூட்டுறவு கொடியினை மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், ஏற்றி வைத்தார். மேலும், கூட்டுறவு வார உறுதிமொழி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,

கூட்டுறவு இயக்கம் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடு மற்றும் அவசியத்தினை வலியுறுத்தி விழிப்புணர்வு எற்படுத்திட ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 முதல் நவம்பர் 20 வரை கூட்டுறவு வாரவிழா நடத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவு வராவிழாவின் முதல் நிகழ்ச்சியாக அரசின் புதிய செயல்திறன் மிகு திட்டங்களின் மூலம் கூட்டுறவை வலுப்படுத்துதல் தொடர்பாக கூட்டுறவுத் துறை அலுவலர்கள், கூட்டுறவு சங்க பணியாளர்கள், நியாயவிலைக்கடை பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பங்கேற்புடன் கூடிய விழிப்புணர்வு பேரணி கடலூர் டவுன்ஹாலிலிருந்து கூட்டுறவு சங்கங்களின் கடலூர் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம் வரை நடைபெற்றது.

கடன் வசதி திட்டங்கள் மகளிர் மற்றும் ஆடவர் குழுக்கள் மூலம் கடன் வழங்குதல் டாப்செட்கோ, டாம்கோ மற்றும் தாட்கோ கடன்கள் வழங்குதல், மாற்று திறனாளிகளுக்கான கடன்கள், தமிழக அரசு அறிவித்த வேளாண் கடன் தள்ளுபடி திட்டம், நகைக்கடன் தள்ளுபடி திட்டம், சுய உதவிக்குழு தள்ளுபடி திட்டங்களை நிறைவேற்றுதல் மற்றும் அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றுதல் போன்ற பணிகளை கூட்டுறவு சங்கங்கள் செய்து வருகின்றன. இச்சேவையினை பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணைமேயர்பா. தாமரைச்செல்வன், இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வ.சி.கோமதி, கடலூர் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் கே.சி.இரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சை ரெயில் நிலையத்தில் பிரதம மந்திரியின் இந்திய மக்கள் மருந்தகம்: காணொலி காட்சி மூலம் பிரதமர் திறந்து வைத்தார்




தஞ்சாவூர்,நவ.16

தஞ்சை ரெயில் நிலையம் உள்பட 18 ரெயில் நிலையங்களில் பிரதம மந்திரியின் இந்திய மக்கள் மருந்தகம் திறப்பு விழா நடந்தது. பீகார் மாநிலத்தில் நடைபெற்ற விழா மேடையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அப்போது காணொலி காட்சி மூலம் தஞ்சை ரெயில் நிலையம் உள்பட 18 ரெயில் நிலையங்களில் பிரதம மந்திரியின் இந்திய மக்கள் மருந்தகத்தை தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து தஞ்சை ரெயில் நிலையத்தில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. விழாவில் தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். பின்னர் தஞ்சை ரெயில் நிலையத்தில் பணியாற்றி வரும் தூய்மை பெண் பணியாளர்களுக்கு நாப்கின் மற்றும் சாமண்ட்ரி பெட்டிகளை மேயர் வழங்கினார். விழாவில் திருச்சி ரெயில்வே கோட்ட மேலாளர் அன்பழகன், முதன்மை திட்ட மேலாளர் நசீர் அகமது, முதுநிலை மண்டல வணிக மேலாளர் ஜெயந்தி, மண்டல வணிக மேலாளர் மோகனப்பிரியா தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் இந்திய பார்மசிட்டிகல் மற்றும் மருத்துவ பிரிவு நோடல் அலுவலர் நாராயணா, தஞ்சை தெற்கு மாவட்ட பாஜக தலைவர் ஜெய் சதீஷ், மாவட்ட பொருளாளர் விநாயகம், நெசவாளர் பிரிவு மாநில செயலாளர் உமாபதி, ஐ.டி.பிரிவு மாவட்ட பார்வையாளர் தங்கதுரை,

ரெயில்வே மக்கள் தொடர்பு அலுவலர் வினோத், மற்றும் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக மருந்தக லைசென்ஸ் தாரர் அம்மன் ஏஜென்சி ஜெயச்சந்திரன் வரவேற்றார். பிரதம மந்திரியின் இந்திய மக்கள் மருந்தகம் இந்தியா முழுவதும் 14 ஆயிரத்து 300 இடங்களில் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் ஆயிரத்து 270 இடங்களில் உள்ளன. இந்த மருந்தகங்களில் உயர்தரமான மருந்துகள் குறைந்த விலையில் விற்கப்படுகிறது. கடந்த 9 ஆண்டுகளில் இந்திய மக்கள் மருத்துவ செலவை சுமார் ரூ.25 ஆயிரம் சேமித்து உள்ளது. 2026 ஆம் ஆண்டிற்குள் 25 ஆயிரம் மருந்தகங்கள் திறக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

திருச்சி கோட்டத்தில் திருச்சி ரெயில் நிலையத்திற்கு அடுத்ததாக தஞ்சை ரெயில் நிலையத்தில் இந்த மருந்தகம் திறக்கப்பட்டுள்ளது. விரைவில் புதுச்சேரி ரெயில் நிலையத்தில் பிரதம மந்திரியின் இந்திய மக்கள் மருந்தகம் திறக்கப்பட உள்ளது. இந்த தகவல்களை ரெயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் போதை பொருள் தீமை குறித்து விழிப்புணர்வு பயிற்சி



முதுகுளத்தூர்,நவ.16

முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் என்.எஸ்.எஸ் சார்பில் போதை பொருள் தீமை குறித்து விழிப்புணர்வு பயிற்சி நடைபெற்றது. என்.எஸ்.எஸ் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியை ரஜியாபானு தலைமை வகித்தார். அனைவரையும் என்.எஸ்.எஸ் திட்ட அலுவலர் மங்களநாதன் வரவேற்றார். முதுகுளத்தூர் காவல் நிலைய சட்டம் ஒழுங்கு சார்பு ஆய்வாளர் சுரேஷ் குமார் கலந்து கொண்டு போதை பொருளால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ஆசிரியை விஜயலெட்சுமி நன்றி கூறினார். என்.எஸ்.எஸ் மாணவர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# 'வா வாத்தியார்' படத்தின் டீசர் வெளியானது



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் கார்த்தி. இவரது நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் 'மெய்யழகன்'. இப்படத்தை இயக்குனர் பிரேம் குமார் இயக்கி இருந்தார். அதனைத்தொடர்ந்து, பி.எஸ். மித்ரன் இயக்கத்தில் சர்தார் 2 திரைப்படத்திலும் கார்த்தி நடித்து வருகிறார்

அதுமட்டுமில்லாமல், நலன் குமாரசாமி இயக்கத்தில் கார்த்தி தனது 26வது படத்திலும் நடித்து வருகிறார். இப்படத்திற்கு 'வா வாத்தியார்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் நடிகர் கார்த்தி எம்.ஜி.ஆர் ரசிகனாக நடிக்கிறார். இந்த படத்தை ஸ்டூடியோ கிரீன் நிறுவனம் தயாரிக்க சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார்.

சத்யராஜ், ராஜ் கிரண் உள்ளிட்டோர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படம் பொங்கலுக்கு வெளியாக உள்ளதாக தெரிகிறது. இந்தநிலையில், 'வா வாத்தியார்' படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.

# 'கங்குவா' படத்தை வெளியிட நிபந்தனையுடன் அனுமதி



இயக்குனர் சிவா இயக்கத்தில் நடிகர் சூர்யா நடித்துள்ள திரைப்படம் 'கங்குவா'. ஸ்டூடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தில் திஷா பதானி, பாபி தியோல், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

இப்படம் நாளை வெளியாக உள்ளது. முன்னதாக கங்குவா திரைப்படத்தை வெளியிடுவதற்கு எதிராக சென்னை ஐக்கோர்ட்டில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்கில் இன்று சென்னை ஐக்கோர்ட்டு உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

அதன்படி, பியூல் டெக்னாலஜி நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய ரூ.1.60 கோடியை ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் செலுத்தி இருக்கிறது. அதேபோல், மற்றொரு வழக்கில் ரூ.6.41 கோடியை செலுத்தியுள்ள நிலையில், மீதி தொகை ரூ. 3.75 கோடியை அடுத்த மாதம் 11ம் தேதிக்குள் செலுத்துவதாக ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் உறுதி கொடுத்துள்ளது.

இதனையடுத்து, சூர்யாவின் 'கங்குவா' படத்தை நாளை திட்டமிட்டபடி வெளியிட சென்னை ஐகோர்ட்டு நிபந்தனையுடன் அனுமதி வழங்கியுள்ளது.

# ஐஸ்வர்யா லட்சுமி நடித்துள்ள 'ஹலோ மம்மி' படத்தின் டிரெய்லர் வெளியானது



ஐஸ்வர்யா லட்சுமி மலையாள சினிமாவில் நுழைந்து பலபடங்களில்நடித்துஇருந்தாலும்தமிழிலும்இவருக்கு ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் 'ஜகமே தந்திரம்', விஷ்ணு விஷால் நடிப்பில் வெளியான 'கட்டா குஸ்தி', மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'பொன்னியின் செல்வன்' ஆகிய திரைப்படங்கள் இவருக்கு நல்ல பெயரை பெற்று தந்தன.

இவர் தற்பொழுது 'ஹலோ மம்மி' என்ற திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தை அறிமுக இயக்குனரான வைஷக் இளன்ஸ் இயக்கி உள்ளார். ஷரப் உதீன் கதாநாயகனாக நடித்துள்ள இப்படத்தில் அஜு வர்கீஸ், ஜெகதீஷ், ஜானி ஆண்டனி, பிந்து பேனிக்கர், சன்னி இந்துஜா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படம் வருகிற 21ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளநிலையில், தற்போது படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது .

# ஆஸ்திரேலியாவில் இதை செய்தால் மீண்டும் பார்முக்கு திரும்பலாம் கோலிக்கு சாஸ்திரி அட்வைஸ்



இந்திய கிரிக்கெட் அணி, ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பார்டர்கவாஸ்கர் கோப்பையான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. அதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் வருகிற 22ந் தேதி தொடங்குகிறது. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேற இந்த தொடரில் கட்டாயம் வென்றாக வேண்டும் என்ற நெருக்கடிக்கு மத்தியில் இந்தியா விளையாட உள்ளது.

கடந்த காலங்களில் ஆஸ்திரேலிய மண்ணில் சிறப்பாக செயல்பட்டு வந்த இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் விராட் கோலி சமீப காலங்களில் சொந்த மண்ணில் கூட சுமாரான செயல்பாடுகளையே வெளிப்படுத்தி வருகிறார். இதனால் இந்த தொடரில் இந்தியா வெற்றி பெற அவர் சிறப்பாக செயல்பட வேண்டியது அவசியமாகிறது.

இந்நிலையில் ஆஸ்திரேலியா என்னும் கோட்டைக்கு விராட் கோலி எனும் கிங் மீண்டும் விளையாட வந்துள்ளதாக இந்திய முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார். சுமாரான பார்மில் இருந்தாலும் விராட் கோலியை நினைத்து ஆஸ்திரேலிய அணியினர் கொஞ்சம் பயப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே இந்த தொடரின் முதல் 3 இன்னிங்ஸ்களில் அவசரப்படாமல் ஒரு மணி நேரம் நங்கூரமாக விளையாடுமாறு விராட் கோலிக்கு அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார் அதை செய்தால் நிச்சயம் இத்தொடரில் விராட் கோலியால் ராஜாவாக செயல்பட முடியும் என்றும் ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு: "கிங் தன்னுடைய கோட்டைக்கு மீண்டும் திரும்பியுள்ளார் என்றுதான் நான் ஆஸ்திரேலியாவுக்கு சொல்ல முடியும். கிங் எனும் பட்டத்தை நீங்கள் ஆஸ்திரேலியாவில் சிறப்பாக விளையாடி எதிரணியிடம் பெற்றுள்ளீர்கள். எனவே நீங்கள் பேட்டிங் செய்ய செல்லும்போது அது எதிரணியின் மனதில் இருக்கும். நீங்கள் ஆக்ரோஷத்துடன் செயல்படும்போது விஷயங்கள் பின்தொடரலாம். ஆனால் இந்த முறை நீங்கள் நிதானமாக விளையாட வேண்டும்.

ஏனெனில் ஆக்ரோஷத்துடன் விளையாடினால் விரைவில் நீங்கள் அவுட்டாகலாம். எனவே பேட்டிங் செய்ய செல்லும்போது இந்த தொடரின் முதல் மூன்று இன்னிங்ஸ்களில் முதல் ஒரு மணி நேரம் நீங்கள் அமைதியுடன் கவனத்துடன் விளையாடுவது மிகவும் முக்கியம். அந்த காலங்களில் நீங்கள் பொறுமையுடன் நிதானமாக உங்களுடைய சொந்த வேகத்தில் விளையாடினால் அனைத்தும் சரியாகி விடும்" என்று கூறினார்.

# 90 ஆண்டு கால ரஞ்சி கிரிக்கெட் வரலாற்றில் மாபெரும் சாதனை படைத்த பாக்லே கவுதங்கர் ஜோடி



இந்தியாவில் நடைபெறும் முதன்மை உள்ளூர் டெஸ்ட் தொடரான ரஞ்சி கோப்பையின் 90வது சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது.

இதில் 'பிளேட்' பிரிவில் இடம்பெற்றுள்ள கோவா அருணாச்சலபிரதேச அணிகள் இடையிலான ஆட்டம் கோவாவில் கடந்த 13ம் தேதி தொடங்கியது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த அருணாச்சலபிரதேச அணி 84 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக நபம் தாகன் அபோ 25 ரன்கள் அடிக்க, கோவா தரப்பில் அதிகபட்சமாக அர்ஜுன் டெண்டுல்கர் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை ஆடிய கோவா 92 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 727 ரன்கள் குவித்து 'டிக்ளேர்' செய்தது. அதிகபட்சமாக காஷ்யப் பாக்லே 300 ரன்களுடனும், சினேஹல் கவுதங்கர் 314 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இவர்கள் 3வது விக்கெட்டுக்கு 606 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தனர்.

இதன் மூலம் 90 ஆண்டு கால ரஞ்சி கிரிக்கெட் வரலாற்றில் ஒரு விக்கெட்டுக்கு 600 ரன்களுக்கு மேல் பார்ட்னர்ஷிப் அமைத்த முதல் ஜோடி என்ற மாபெரும் சாதனையை படைத்துள்ளனர். இதற்கு முன்பு 2016 17ம் ஆண்டு டெல்லிக்கு எதிரான ஆட்டத்தில் மராட்டியத்தின் ஸ்வப்னில் குகலே அங்கித் பாவ்னே ஜோடி 594 ரன்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள காஷ்யப் பாக்லே சினேஹல் கவுதங்கர் புதிய சாதனை படைத்துள்ளது.

இதனையடுத்து 643 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை ஆடிய அருணாச்சலபிரதேச அணி, கோவா பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 22.3 ஓவர்களில் 92 ரன்களில் ஆல்அவுட் ஆனது. இதனால் கோவா இன்னிங்ஸ் மற்றும் 551 ரன்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.


NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041


Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.